**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 36** **நாள்: 10.04.2024**

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கிண்டியில் உள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்தில் இன்று (10.04.2024) நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தலைமையில் மாணவியர் மற்றும் அலுவலர்கள் அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பேசியதாவது :**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் மாணவர்கள் அனைவரும் ஜனநாயக கடமையை நிறைவேற்றும் வகையில் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது நமது கடமை மட்டுமல்ல, நமது உரிமையும் கூட. இந்த நாடு நமக்கு அளித்த இந்த உரிமையைச் சரியாக பயன்படுத்துவது நமது தலையாய கடமையாகும்.

மேலும், தேர்தலில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து உங்கள் பெற்றோர், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் எடுத்துரைத்து தேர்தலில் வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்கவுள்ள மாணவியர் தங்களின் கடமையை சரியாக உணர்ந்து 19.04.2024 அன்றைய வாக்குப்பதிவு நாளில் தவறாமல் வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தேர்தல் நடத்தும் அலுவலர்/தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.சீனிவாசன், கல்லூரி முதல்வர் திருமதி மலர்விழி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**